# ஊடக வெளியீடு

UNDP

## ஐக்கிய நாடுகள் சபையின் உதவிச் செயலாளர் நாயகம் மற்றும்  UNDP ஆசிய பசுபிக் தலைவர் ஒரு நாள் விஜயத்தை நிறைவு செய்துகொண்டு, இலங்கை ஜனாதிபதி மற்றும் பிரதமரைச் சந்தித்தார்.

*தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலுக்கான UNDP இன் தொடர்ச்சியான ஆதரவை திருமதி. கனி விக்னராஜா வலுப்படுத்துகின்றார்*

**15 ஒக்டோபர் 2024, கொழும்பு, இலங்கை:** ஐக்கிய நாடுகளின் உதவிச் செயலாளர் நாயகமும் (ASG), ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்தின் (UNDP) ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்திற்கான பிராந்திய பணிப்பாளருமான திருமதி. கனி விக்னராஜா இன்று நாட்டிற்கான தனது ஒரு நாள் விஜயத்தின் போது ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க, பிரதமர் கலாநிதி. ஹரிணி அமரசூரிய ஆகியோரை சந்தித்தார். ASG விக்னராஜாவுடன் UNDP இன் இலங்கைக்கான UNDP வதிவிடப் பிரதிநிதியான திருமதி அசூசா குபோடாவும் கலந்துகொண்டார்.

திருமதி. கனி விக்னராஜா தனது சந்திப்பில், பொருளாதாரம் மற்றும் நிர்வாக சீர்திருத்தங்கள், பொறுப்புக்கூறல், புத்தாக்கத்திற்கான நிதியளிப்பு, டிஜிட்டல் மயமாக்கல், பொதுத்துறை நவீனமயமாக்கல் மற்றும் நாட்டில் மிகவும் நலிவடைந்த சமூகங்களின் பாதுகாப்பு ஆகிய துறைகளில் நிலையான அபிவிருத்தியை அடைவதற்கான தேசிய முன்னுரிமைகளை ஆதரிப்பதற்காக UNDP இனது நீண்டகால பங்காண்மையை கட்டியெழுப்புவதற்கான அதனது அர்ப்பணிப்பை வலுப்படுத்தினார். ASG விக்னராஜா, பொருளாதாரம், அனர்த்தங்கள் மற்றும் காலநிலை மாற்றத்தின் பல்வகைப்பட்ட அதிர்ச்சிகளுக்கு ஆளான பெண்கள், இளைஞர்கள் மற்றும் கிராமப்புற விவசாயிகள் மீது குறிப்பான அவதானம் செலுத்தி, இந்த விடயப்பரப்புகளில் UNDP யின் கொள்கை மற்றும் தொழில்நுட்ப சலுகைகளை தொடர்பாக மீண்டும் வலியுறுத்தினார்.

திருமதி. கனி விக்னராஜா தற்போது ஐக்கிய நாடுகள் சபையில் அதி உயர் பதவிநிலையில் சேவையாற்றிய இலங்கையர் என்பதுடன் அண்மையில் முடிவடைந்த ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து இலங்கைக்கு விஜயம் செய்யும் முதலாவது ஐ.நா. அலுவலராவார்.

****நிறைவு****

*UNDP: UNDP சமூகத்தின் அனைத்து மட்டங்களிலும் உள்ள மக்களுடன் பங்காளர்களாவதுடன், நெருக்கடிகளை எதிர்கொள்ளக்கூடிய நாடுகளாக உருவாகவும், அனைவரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையிலான அபிவிருத்தியை ஏற்படுத்தி தக்கவைத்துக்கொள்ளவும் உதவுகிறது. நாங்கள் 170 நாடுகள் மற்றும் பிராந்தியங்களில் உள்ள நிலப்பரப்பில், வாழ்க்கையை வலுவூட்டுவதற்கும் மீண்டெழுதிறன் கொண்ட நாடுகளை உருவாக்குவதற்கும் உலகளாவிய முன்னோக்கு மற்றும் உள்ளூர் நுண்பார்வைகளை வழங்குகின்றோம்.*

*www.undp.org/srilanka*

தொடர்பு: Socialmedia.lk@undp.org | 0779804188 | Ext. 1501 தொடர்பில் இருங்கள் : UNDP on Twitter | Facebook | Instagram